செ. கு. எண்:038 நாள் :12.07.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –12.7.2015

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருக்கள்பட்டி கிராம பிரதான சாலையில், 2.5.2015 அன்று சங்கரன்கோவிலிலிருந்து திருநெல்வேலி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து எதிரே வந்த வேன் மீது மோதியதில் வேனில் பயணம் செய்த விருதுநகர் மாவட்டம், சொக்கன்நாதன்புதூரைச் சேர்ந்த திரு சோலைமலை என்பவரின் மனைவி செல்வி, திரு நடராஜன் என்பவரின் மனைவி செல்வவடிவு; மதுரை மாவட்டம், உசிலம்பட்டியைச் சேர்ந்த திரு சந்திரசேகர் என்பவரின் மனைவி சாந்தி, அவருடைய குழந்தை கார்த்திகேயன் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், வடமலை சமுத்திரம், அகஸ்தியர்புரத்தைச் சேர்ந்த திரு. பிரான்சிஸ் என்பவரின் மகன் ஞானசேகர் ஆகியோர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் நான்கு நபர்கள் பலத்த காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**